**செய்தி வெளியீடு எண்: 503** **நாள்: 27.07.2018**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (27.07.2018) சேலம் மாவட்டம், வனவாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியிலே நடைபெறுகின்ற அம்மாவினுடைய அரசு கல்வியை மையமாக வைத்துத்தான் இருக்கிறது. எந்த ஒரு மாநிலத்தில் கல்வியாளர்கள் அதிகம் இருக்கின்றார்களோ அந்த மாநிலம் வளர்ச்சி பெறும், பொருளாதார மேம்பாடு அடையும், அமைதி நிலவும். நம்முடைய மாநில மக்களுக்கு கல்வி கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே அதிக நிதி ஒதுக்கித் தந்தார்கள். அதைத் தொடர்ந்து அம்மாவினுடைய அரசும் கல்விக்கும், உயர்கல்விக்கும் மற்ற துறையைக் காட்டிலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து, இந்தத் துறையின் மூலமாக எண்ணற்ற மாணவ, மாணவியர்கள் கல்வி பயில வேண்டுமென்பதற்காக அதிக நிதியை கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன். இந்தப் பகுதியில் தொழில்நுட்ப கல்லூரி உருவாக்க வேண்டுமென்று நீங்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் மையமாக இருக்கக்கூடிய இந்த வனவாசி பகுதியை தேர்ந்தெடுத்து, அற்புதமான பாலிடெக்னிக் கல்லூரிக்கு நான் கடந்த வருடம் அடிக்கல் நாட்டினேன். இப்பொழுது உங்களுடைய மகத்தான ஆதரவிலே அதனை திறந்து வைத்திருக்கின்றோம். அம்மாவினுடைய அரசு எப்படி சாதனை படைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த ஆண்டு இந்தக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, துரிதமாக, வேகமாக பணிகள் நடைபெற்று, அனுமதி வழங்கி, இந்தக் கல்லூரியை நாங்கள் துவக்கியிருக்கின்றோம், இதுதான் சாதனை. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே 65 அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளை

கொடுத்தார்கள். அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கடைக்கோடியில் இருக்கின்ற, கிராமத்திலே வாழ்கின்ற குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர்களுக்கு எல்லாம் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி கிடைக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான், அரசாங்கமே இன்றைக்கு கல்லூரியை திறந்து, அவர்களுடைய வாழ்க்கையை மேம்பாடு செய்ய வழிவகை செய்திருக்கிறது.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இத்தனை கல்லூரிகளை திறந்தார்களா? இத்தனை ஏழை மாணவர்கள் உயர்கல்வி படித்தார்களா? என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கல்லூரி திறந்து ஐந்தே நாட்களில் 200 நபர்கள் சேர்க்கை நடந்திருக்கிறது, 300 நபர்கள் சேர்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது, சிவில் இன்ஜினியிரிங், கம்ப்யூட்டர் இன்ஜினியரிங், எலக்ட்ரிகள் & எலக்ட்ரானிக் இன்ஜினியரிங், எலக்ட்ரானிக் & கம்யூனிகேஷன் இன்ஜினியரிங், மெக்கானிக்கல் இன்ஜினியரிங் என ஐந்து பாடத் திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளது, இது ஒரு பெரிய சாதனை. இதற்காக இன்றைக்கு அம்மாவினுடைய அரசு ரூ.56 கோடியில் இந்த பாலிடெக்னிக் கல்லூரியை உருவாக்கித் தந்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு, அரசு கலை கல்லூரியை அம்மா கொடுத்தார்கள், இதில் இன்றைக்கு 1300 பேர் படிக்கிறார்கள். அதோடு பி.எட்.கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள், எட்டுகோட்டைமேட்டில் பி.எட்.கல்லூரி கட்டிக் கொண்டிருக்கிறோம், அடுத்த ஆண்டு திறக்கப்படும். எட்டுக்கோட்டைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டையும் இன்னும் ஒரு வருடத்தில் திறக்கப்படும்.

ஏற்கனவே நாங்கள் வாக்கு சேகரிக்கும்பொழுது, எல்லா கிராமங்கள், பேருராட்சிகளுக்கு செல்லும்பொழுதும், இங்கு இருக்கும் எங்களது இருக்கும் தண்ணீர் பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலகட்டத்தில் இதைத் தெரிவித்தேன். எங்களுக்கு குடிப்பதற்கு நீர் கிடைக்கவில்லை. ஆகவே, பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் வழங்குவதற்கு நீங்கள் கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அந்த கோரிக்கையின் அடிப்படையில், மேச்சேரி, நங்கவள்ளி இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும் உள்ளடக்கி கூட்டுக் குடிநீர் திட்டத்தை அறிவித்தார்கள். கிட்டத்தட்ட 158.64 கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அருமையான tank கட்டிக் கொண்டிருக்கிறோம், இதுபோல, பல tank கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு மாதத்தில் இந்தப் பணி முடிவுற்று மேச்சேரி ஒன்றியம், நங்கவள்ளி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட நிலையான காவிரி தண்ணீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற திட்டங்கள் எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட 51 புதிய குடியிருப்புகளுக்கு சுமார் 11302 மக்கள் பயன்பெறும் வகையில் 327 குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்யப்பட்டு, அதற்காக ஒன்பதரை கோடி ரூபாய் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்தப் பணியும் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றது. ஜலகண்டபுரத்தில் செப்டேஜ் மேனேஜ்மெண்ட் செயல் திட்டத்தில் 2.9 கோடியில் கசடு மேலாண்மை திட்டத்தை அமல்படுத்த இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தினுடைய முன்னோடி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, நங்கவள்ளியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இன்றைக்கு திறக்கப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். 20 கிலோமீட்டர் சுற்றளவில் பெரிய ஊர்கள் கொண்ட பகுதியாக இந்தப் பகுதி இருக்கிறது. இங்கு ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், உடனடியாக இங்கு வந்து, தீயை அணைக்கக்கூடிய அளவிற்கு இந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு தமிழ்நாட்டில் மொத்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் எண்ணிக்கை 326, தற்போது புதிதாக திறக்கப்பட்ட நங்கவள்ளி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தை சேர்த்து, இப்பொழுது 327 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் இருக்கின்றது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுதே, உயரத்தில் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், அதை அணைப்பதற்காக 104 மீட்டர் உயரம், கிட்டத்தட்ட 350 அடி உயரத்தில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் கூட, அதை அணைக்கக்கூடிய அளவிற்கான ஊர்தியை வாங்கியிருக்கிறோம். இந்தியாவிலேயே நம்முடைய மாநிலம்தான் இந்த ஊர்தியை வாங்கியிருக்கிறது. இது அம்மாவினுடைய ஆட்சியில் போடப்பட்ட இந்தத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது. இன்றைக்கு தீயணைப்புத் துறையை பொறுத்தவரையில் 7225 நபர்கள் இருக்கிறார்கள், பெண் தீயணைப்பு வீரர்கள் ஒருவரும் இல்லை, 9 பெண் நிலைய அலுவலர்கள், 2 பெண் துணை இயக்குநர்கள் இருக்கிறார்கள். அம்மாவினுடைய அரசு 2013–ஆம் ஆண்டு 791 நபர்களும், 2017–ஆம் ஆண்டு 1434 நபர்களும், ஆக மொத்தம் 2225 நபர்களும் இந்த தீயணைப்புத் துறையில் புதிதாக அலுவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு இணைக்கப்பட்டிருக்கின்றார்கள். தீயை அணைத்தல் தவிர, பொதுமக்களுக்கு வெள்ளக் காலங்களில், விபத்துக் காலங்களில் எவ்வாறு செயல்படுவது என்ற விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சிகள், பொருட்காட்சி மேடை நாடகங்கள், குறும்படங்கள் மூலம்

பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், குடிசைப் பகுதிகள் மற்றும் அடுக்குமாடி கட்டடப் பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டில் தீ தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் 4881 கல்வி நிறுவனங்கள், 4095 தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் கிட்டத்தட்ட 9076 இடங்களில் நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, தீ விபத்து ஏற்பட்டால், எப்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக மேற்கொள்ள வேண்டுமென்ற விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதற்காக, அம்மாவினுடைய அரசால் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். நியாய விலைக்கடைகள் கட்டுவதில் ரூ.307.15 லட்சத்தில், 42 எண்ணிக்கையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய அங்கன்வாடி கட்டடம் ரூ.72.80 லட்சத்தில் 13 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பல்நோக்கு மைய கட்டடம் ரூ.53.58 லட்சம் மதிப்பீட்டில் 7 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமுதாயக் கூடம் ரூ.58.50 லட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய கால்நடை மருந்தகங்கள், புதிய கால்நடை கட்டடங்களும் கச்சுப்பள்ளி, பக்கநாடு மற்றும் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டு திறக்கப்பட்டன. அணுகுசாலை அமைக்க ரூ.3 லட்சம் மதிப்பீட்டில் 1 பணி மேற்கொள்ளப்பட்டது. பொது சுகாதார வளாக கட்டடம் ரூ.54.35 லட்சம் மதிப்பீட்டில் 7 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சிமெண்ட் கான்க்ரீட் சாலை ரூ.67.90 லட்சம் மதிப்பீட்டில் 18 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டுவதில் ரூ.60.20 லட்சம் மதிப்பீட்டில் 16 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிகளில் மிதிவண்டி நிறுத்தும் கூடம் அமைத்தல் ரூ.64.10 லட்சம் மதிப்பீட்டில் 16 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கழிவு நீர் வாய்க்கால் அமைத்தல் ரூ.32.75 இலட்சம் மதிப்பீட்டில் 6 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சிறு மின் விசை பம்பு அமைத்தல் ரூ.1.65 இலட்சம் மதிப்பீட்டில் 1 பணி மேற்கொள்ளப்பட்டது. புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் ரூ.149.70 லட்சம் மதிப்பீட்டில் 58 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தார் சாலை புதுப்பித்தல் ரூ.98.74 லட்சம் மதிப்பீட்டில் 11 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பழுதடைந்த வீடுகளை புதுப்பித்தல் ரூ.12.50 லட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் ரூ.5.30 லட்சம் மதிப்பீட்டில் 2 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஈரடுக்கு தார்சாலை அமைத்தல் ரூ.16.50 லட்சம் மதிப்பீட்டில் 2 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுமட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு கிராம சாலைகள் சீர் செய்யப்பட்டு வருகிறது. அங்கன் மையங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கும் பணிகள் ரூ.31.93 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன.

தேர்தல் நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிக்குச் செல்கின்றபொழுது, 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம், மழைக்காலத்தில் மேற்கூரை வழியாக நீர் வடிகிறது, எனவே, மேற்கூரையை அப்புறப்படுத்திவிட்டு, நல்ல கூரை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கின்ற 25 ஆண்டுகளுக்கு மேல் இருக்கின்ற 45000 வீடுகளுக்கு கூரைகளை மாற்றிக் கொடுத்து, சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலே, உபரிநீரை, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற வறட்சியான பகுதிக்கு, ஏரிகளில் நிரப்பி, அதன்

மூலமாக நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து, விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைக்கும், பாசனத்திற்கும், குடிப்பதற்கும் தேவையான நீர் கிடைக்க வழிவகை செய்வதற்காக திட்டம் தீட்டப்பட்டது. இதற்கு ஆரம்ப கட்டமாக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடும் செய்யப்பட்டது. அந்தத் திட்டம் துரிதமாக நடைபெற வேண்டும் என்பதற்காக, 2 மாதத்திற்கு முன்பு, ஓய்வு பெற்ற தலைமை பொறியாளர்களின் குழுவை அமைத்து, அவர்களுக்கு தேவையான வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து, அவர்கள் இந்தப் பணியை மேற்கொள்ள இருக்கின்றார்கள். மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை எடுத்து, கிட்டத்தட்ட 93 ஏரிகள், எந்தெந்த பகுதிக்கு தண்ணீரை கொண்டு செல்ல முடியுமோ அந்தப் பகுதிகளில் தண்ணீர் சேர்ப்பதற்கெல்லாம் இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டம் பெரிய திட்டமாதலால், சர்வே செய்து கொண்டிருக்கிறார்கள், இந்தப் பணிக்கு வேண்டிய அதிகாரிகள், பொறியாளர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தால், இதை விரைவாக செயல்படுத்த வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு ஓய்வு பெற்ற தலைமை பொறியாளர்களின் குழுவை அமைத்திருக்கிறது. இப்பணிகளை துரிதமாக மேற்கொண்டு நிறைவேற்றித் தரப்பட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல விவசாயிகள் வண்டல் மண்ணை இயற்கை உரமாக பயன்படுத்தக்கூடியது கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, ஏரி, குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்து இயற்கை உரமாக பயன்படுத்த குடிமராத்துத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். பரீட்சார்த்த முறையில், முதற்கட்டமாக ரூபாய் 100 கோடி செலவில் 1519 ஏரிகள் தேர்வு செய்து பராமரிப்புப் பணியை மேற்கொண்டோம். வெற்றிகரமாக, அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களும், பொதுமக்களும் வரவேற்பு கிடைத்ததால், இந்த ஆண்டு ரூபாய் 328 கோடி இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதற்காக 1511 ஏரிகள்

தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. விவசாயிகளே இந்த பணியை மேற்கொள்வார்கள், டெண்டர் கிடையாது. டெண்டர்முறையை மாற்றி, விவசாயிகளின் பங்களிப்போடு குடிமராமத்துத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்டு அதை நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். ஏரிகளோ, குளங்களோ, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற பாசனம் பெறுகின்ற விவசாயிகளை உறுப்பினர்களாக சேர்த்து குழு அமைத்திருக்கின்றார்கள். அக்குழுவில் பதிவு செய்கின்ற விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் கிடைக்கும். ஏரிகள், குளங்களில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள தேவையான நிதிகள் அம்மாவினுடைய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மூன்று ஆண்டுகாலத் திட்டமாக, ஓடைகள், நதிகளின் வழியாக ஓடுகின்ற நீர் பருவமழை காலங்களில் அதிகமாக மழை பொழிகின்றபொழுது கிடைக்கின்ற நீர் கடலிலே கலப்பதைத் தடுப்பதற்கு எந்தெந்த பகுதிகளில் தடுப்பணை கட்டலாம் என்பதை ஆராய்ந்து, ஆய்வு செய்து தடுப்பணை கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படும். நதியின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கி, மூன்றாண்டுகளில் இந்த திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டங்களை நிறைவேற்றுகின்றபொழுது, பொழிகின்ற மழைநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் பார்த்துக்கொள்ளும் நிலையிலே அரசு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மாவினுடைய அரசு தொடர்ந்து விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கின்ற அரசு என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரையில், மக்கள் நினைப்பதை செயல்படுத்துகின்றோம். அம்மா அவர்கள் போராடி, வாதாடி, காவிரி மேலாண்மை ஆணையத்தை பெற்ற அரசு அம்மாவினுடைய அரசு. ஓராண்டு,

ஈராண்டு அல்ல, பல ஆண்டு காலமாக போராடி வந்த போராட்டத்திற்கு முடிவு கிடைத்திருக்கிறது. நமக்குக் கிடைக்ககூடிய பங்கு நீரை பெற்றுத் தருவதற்கு அம்மாவினுடைய அரசு போராடி, தீர்ப்பை பெற்றுத் தந்திருக்கிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் கருதி நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு நீரை கர்நாடக அரசிடமிருந்து பெறுவதற்காக 4 நாட்கள் தன் உடல்நிலையைகூட பொருட்படுத்தாமல் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த வகையிலே அம்மாவினுடைய அரசு, அம்மா அவர்கள் இருந்தபொழுது, உச்சநீதிமன்றத்தில் தொடந்த வழக்கின் அடிப்படையிலே இன்றைக்கு தீர்ப்பைப் பெற்று அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும் அமைக்கப்பட்டு, இரண்டு கூட்டமும் நடைபெற்று முடிந்திருக்கிறது. இந்த இரண்டு கூட்டங்களிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் நமக்கு காவிரியில் கிடைக்க வேண்டிய நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டுமென கூறி உச்சநீதிமன்றம் மூலமாக தீர்ப்பை அம்மாவினுடைய அரசு பெற்றுத் தந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அதுமட்டுமல்ல, இறைவனும் நமக்கு பக்கபலமாக இருக்கிறார். கர்நாடக அரசு தண்ணீர் தந்தாலும், தராவிட்டாலும் இயற்கை நமக்கு சாதகமாக உள்ளது. எல்லாம்வல்ல இறைவனின் அருளாலும், வருண பகவானுடைய ஆசியாலும் நல்ல மழை பொழிந்து மேட்டூர் அணையில் 30 நாளில் 120 அடி உயர்ந்து உபரி நீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது. அப்பபடிப்பட்ட நல்ல சூழ்நிலை எல்லா அணைகளும், பரம்பிக்குளம், ஆழியாறு, அமராவதி, பவானிசாகர், மணிமுத்தாறு இப்படிப் பல ஆறுகளின் அணைகள் எல்லாம் நிரம்பிக் கொண்டிருக்கிறது. இறைவன் அரசுக்கு துணை நிற்கின்றார், மக்கள் துணை நிற்கின்றார்கள். எவர் தடுத்தாலும், எந்தப் போராட்டம் நடத்தினாலும் அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் மக்கள்தான் எஜமானர்கள்,

மக்கள்தான் நீதிபதிகள், அவர்கள் அளிக்கின்ற தீர்ப்புக்கு அம்மாவினுடைய அரசு கட்டுப்பட்டு, மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசாக செயல்படும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய அரசு அம்மாவினுடைய அரசு. 234 தொகுதிகளிலும் இருக்கக்கூடிய மக்களை, முதலமைச்சர் என்ற முறையில் சென்று பார்க்கக்கூடிய பொறுப்பில் இருக்கின்றேன். அதுமட்டுமல்ல, 234 தொகுதிக்கும் கிடைக்கக்பெறாத வாய்ப்பை, எடப்பாடி சட்டமன்ற தொகுதி முதலமைச்சர் என்ற வாய்ப்பை பெற்றிருக்கிறது. இந்த வாய்ப்பின் அடிப்படையில்தான் பல்வேறு திட்டங்கள், சாலைகள், பாலங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு மக்களுடைய அரசு, மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசு. ஏழை, எளிய மக்களின் நன்மைக்காக பாடுபடுகின்ற அரசாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நன்றி.

வணக்கம்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**